வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.4553 /ஆ2/2023, நாள் : 09.11.2023

பொருள்: பள்ளிக்கல்வித்துறை –வேலூர் மாவட்டம் –JEE /NEET தேர்வுகள்– மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு பயிலும் விருப்பமுள்ள மாணவர்களின் விவரங்கள் –Google Sheet –ல் பதிவுகள் மேற்கொள்ளுதல் மற்றும் அறிவுரைகள் –வழகங்குதல் –தொடர்பாக

பார்வை : 1. பள்ளிக்கல்வி இணை இயக்குநரின்(தொழிற்கல்வி) மின்னஞ்சல் நாள் 01.11.2023
2. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள் 02.11.2023

-----

வேலூர் மாவட்டத்தில் 2023–2024 ஆம் கல்வியாண்டில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் மேல்நிலைப் பள்ளிகளில் மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு பயிலும் மாணவர்களில் JEE /NEET தேர்வுகள் எழுத விருப்பமுள்ள மாணவர்களின் விவரங்களை Google Sheet –ல் பதிவுகள் மூலம் பெறப்பட்டது.மேலும் JEE /NEET தேர்வுகள் எழுத விருப்பமுள்ள மாணவர்கள் இருப்பின் இத்துடன் இணைக்கப்பட்ட Google Sheet –ல் பதிவுகள் மேற்கொள்ள தெரிவிக்கப்படுகிறது

மேலும் 2023–2024 கல்வியாண்டில் JEE/NEET போட்டித் தேர்வுகளுக்கு தொடர்பாக தொடற்பயிற்சி அளிப்பதற்கான வழிகாட்டு நெறிமுறைகளில் தெரிவிதுள்ள படி 06.11.2023 முதல் 09.11.2023 வரை நடைபெற்ற வினாத்தாட்களுக்குண்டான விடைகுறிப்புகள் மற்றும் 13.11.2023 முதல் 16.11.2023 வரை நடத்தப்பட வேண்டிய வினாத்தாட்கள் பள்ளிகளின் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

- எனவே அரசு மற்றும் அரசு நிதியுதவி மேல்நிலைப்பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் தங்கள் பள்ளிகளுக்கு மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்பட்டுள்ள வினாத்தாட்களை பதிவிறக்கம் (Download) செய்து அடுத்த வாரத்திற்குண்டான வினாத்தாட்களை மாணவர்களுக்கு வழங்குமாறும் நாளை 10.11.2023 வெள்ளிக்கிழமை அன்று (ஒவ்வொருவாரமும்) JEE/NEET போட்டித் தேர்வுகள் எழுதவுள்ள மாணவர்களுக்கு வினாத்தாட்களுக்குரிய விடைகள் குறித்து மீள் பார்வை(Revision) செய்யுமாறு பாடம் சார்ந்த ஆசிரியர்களுக்கு தெரிவிக்கும்படி அனைத்து அரசு மற்றும் அரசு நிதியுதவி மேல்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு மீள தெரிவிக்கப்படுகிறது.
- இனிவரும் காலங்களில் போட்டித் தேர்வுகள் நடைபெறும் நாளன்று சார்ந்த பாடத்திற்குரிய விடைக்குறிப்பு அன்று மாலைக்குள் பள்ளியின் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படும்

- தேர்வுகள் எழுதும் மாணவர்கள் மதிப்பெண் விவரங்கள் இணைக்கப்பட்டுள்ள Google sheet –ல் தேர்வு முடிந்த அடுத்த நாள் பதிவுகள் கட்டாயம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் பதிவுகள் செய்யப்பட்ட படிவங்கள் மற்றும் OMR sheet பள்ளி அளவில் பதிவேடுகள் பராமரிக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது .
- பள்ளி விடுமுறை அல்லது உள்ளூர் விடுமுறை நாட்களில் தேர்வுகள் நடத்தப்படாமல் இருப்பின் அந்த வார இறுதிக்குள் தவறாமல் நடத்தி முடிக்கப்பட வேண்டும் என அனைத்து மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு:

1. JEE /NEET வழிகாட்டு நெறிமுறைகள்.
2. Google Sheet Link
3. 06.11.2023 முதல் 09.11.2023 வரை நடைபெற்ற Test1 விடைகுறிப்புகள்
4. 13.11.2023 முதல் 16.11.2023–க்கான வினாத்தாட்கள்

9/11/23

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

09/11

பெறுநர்

- அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் வேலூர் மாவட்டம்.

நகல் –

- மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை)அவர்களுக்கு தொடர் நடவடிக்கையின் பொருட்டு